## ஆய்வுப்பொருள்: இரண்டு:-
## இறையருளை வழங்கும் அருளடையாளங்கள்

13

### 2.5. நாம் வாழும் கிறிஸ்தவ குடும்பம்



திருமணம் ஓர் அழைத்தல்

கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்; அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்; கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்" என்றார்.

(தொ.நூ. 1:28)

- மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவிலியப் பகுதியை வாசிக்கவும்.
- இறைவன் மனிதனுக்களித்த முக்கிய பணிகள் எவை?



இலவச விநியோகத்திற்காக

திருமணத்தில் கிடைக்கும் மிக மேன்மையான கொடை பிள்ளைப்பேறு. எனவே தான், திருமணத்தின் முக்கிய நோக்கமாகிய பிள்ளைகளைப் பெற்று, நல்வாழ்வு வாழ வழிகாட்ட திருமணத்தில் மனிதன் அழைப்பும் பொறுப்பும் பெறுகின்றான்.

### கிறிஸ்தவப் பெற்றோரின் முக்கிய கடமைகள் :

முழுமையான இணக்கமும், புரிந்துணர்வும், அன்பும் நிலவும் குடும்பத்தை உருவாக்குவது கிறிஸ்தவ பெற்றோரின் முக்கிய கடமையாகும். தம் மட்டிலும், சமூக அளவிலும் பொறுப்புணர்வுள்ள விதத்தில் பிள்ளைகளை வளர்த்தல், பிறரையும் பிறரின் சொத்துக்களையும் மதிக்கவும், பாதுகாக்கவும் பிறருடன் நல்லிணக்கம் கொள்ளத்தக்க விதமாகப் பிள்ளைகளை வளர்த்தலே பெற்றோரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. நல்ல கல்வியை அளித்து பொறுப்பும் பொறுப்புக்களைப் பகிரும் தன்மையையும் கொண்ட பிரஜைகளை உருவாக்க பெற்றோருக்கு கடமையுண்டு. குடும்பச் செபத்தாலும், முன் மாதிரிகையான வாழ்வாலும் பிள்ளைகளுக்கு நல்வழி காட்டுதல் பெற்றோரின் கடமையாகும்.

### பெற்றோர் மட்டில் பிள்ளைகளின் கடமைகள் :

பெற்றோரின் நற்பெயருக்கு கேடு விளைவிக்காதிருத்தல், தம் நன்றியுணர்வாலும் குழந்தைக்குரிய மரியாதையாலும் அவர்களில் கொள்ளும் நம்பிக்கையாலும் தம் பெற்றோருக்கு கைமாறு காட்ட வேண்டும். அவர்களின் நாளாந்தச் சிக்கல்களில், துன்பங்களில் முக்கியமாக அவர்களின் முதுமையில், தனிமையில் இருக்கும்போது அவர்களுக்கு உதவுதல் பிள்ளைகளின் கடமையாகும்.

குடும்பம் மனிதப் பண்பை
வளமுறச் செய்கின்ற ஒரு பள்ளி எனலாம்.
ஆனால், குடும்பத்தின் வாழ்வும் அதன் பணியும்
முழு மலர்ச்சி பெறவேண்டுமானால்
அங்கு பாச உணர்வோடு கூடிய மன ஒன்றிப்பும்,
மணமக்களின் கூட்டு ஆலோசனையும்,
குழந்தைகளைப் பயிற்றுவித்தலில் பெற்றோரின் கருத்தான ஒத்துழைப்பும்
தேவைப்படுகின்றது.
குழந்தைகளைப் பயிற்றுவிக்கும்போது தந்தை செயல்முறையில்
உடனிருந்தால்
அது மிகப் பயனுள்ளதாய் இருக்கும்.
அதேவேளை, வீட்டுச் சூழமைவில் தாயின் அரவணைப்பும் தேவை.
பெண்ணிற்குரிய சமூக அளவிலான மேம்பாட்டைப் பிற்பட்டதாகக் கருதாமல்,
தாயின் இந்த வீட்டுப் பணிக்குப் பாதுகாப்புத் தரப்பட வேண்டும்.
இவ்வாறு குடும்பம் தான்
சமுதாயத்தின் அடித்தளமாக இருக்கின்றது.

2ம் வத்திக்கான் சங்க ஏடு
இன்றைய உலகில் திருச்சபை # 52



இலவச விநியோகத்திற்காக

மேற்கூறப்பட்டவற்றின் அடிப்படையில் சமுதாயத்தின் முக்கியமானதும், பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குமான ஓர் அங்கமாகக் குடும்பம் திகழ்கின்றது.

- குடும்பம் சமுதாயத்தின் மிக முக்கிய அடித்தளமாக விளங்குவதற்கான காரணங்கள் எவை?
  - ❖ நாட்டின் வளர்ச்சியிலும், பாதுகாப்பிலும் முக்கிய பங்காளியாகச் செயற்படுவதால்.
  - ❖ மனித மாண்பையும், மேன்மையையும், பொறுப்புணர்வையும் எடுத்துக் காட்டும் ஓர் இடமாக இருப்பதனால்.
  - ❖ சமுதாயத்தின் தேவைக்கான நற்பிரஜைகளையும் முதிர்ச்சியுடைய, நல்ல தலைமைத்துவம் உள்ளவர்களையும் உருவாக்கித் தருவதனால்.
  - ❖ குடும்பங்களில் இருந்துகொண்டே கிறிஸ்துவுக்கு சான்று பகர்வதால்.
  - ❖ நல்ல கிறிஸ்தவனைத் திருச்சபைக்கு பரிசாக வழங்குவதால்.

ஆசிரியரின் ஆலோசனைகளோடு மேற்கூறப்பட்ட கருத்துக்களைக் கலந்துரையாடி பயிற்சி நூலில் எழுதுக.

திருமணத்தின் நிறைவு
பிள்ளைகளைப் பெறுவது மட்டுமல்ல.
பெற்றோர்களே பிள்ளைகளின் முதல் ஆசிரியர்கள் ஆவர்.
பிள்ளைகள் விசுவாசத்தில் வளர்வதற்கும், நல்லொழுக்கத்திலும்,
பூரண மனிதத் தன்மையிலும், கிறிஸ்துவின் மாதிரிகையிலும்
வாழத் தூண்டுவது பெற்றோர்களே.
பெற்றோர்கள் அடிப்படைக் கல்வியை மட்டுமல்ல,
பிள்ளைகளுக்கு இறை ஆராதனையையும், பக்தியையும் ஊட்ட வேண்டும்.
குடும்பத்தில் ஒன்றிணைந்து செபிப்பதன் மூலமும்,
திருவருட்சாதனங்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலமும்
பெற்றோர் திருமுழுக்கின் வழியாகத் தாம் பெற்ற பொதுக் குருத்துவப் பணிக்கு
இவர்களை இட்டுச் செல்கின்றார்கள்.
வீடு கிறிஸ்து வாழும் இடம் என்பதை
அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

கத்தோலிக்க திருச்சபையின்
மறைக்கல்வி # *1658*

- சிறு குழுக்களாகப் பிரிந்து கொள்ளவும்.
  - மேற்கூறப்பட்ட பகுதியை மீண்டும் அவதானமாக வாசிக்கவும்.
  - கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பதில் எழுதுக.

    1. கிறிஸ்தவ குடும்பத்தில் காணப்படும் விசேட பண்புகளை இனங்கண்டு எழுதுக.
    2. உயிருள்ள கிறிஸ்துவை எங்கள் வீடுகளிலே வாழச் செய்ய குடும்பமாக ஒன்றிணைந்து ஆற்றக்கூடிய செயற்றிட்டம் ஒன்றைக் கலந்துரையாடி எழுதுக.

உன் தந்தையையும் தாயையும் மதித்து நட.
(நான்காவது கற்பனை)

உன் தந்தையை உன் முழு உள்ளத்துடன் மதித்து நட, உன் தாயின் பேறுகாலத் துன்பத்தை மறவாதே. அவர்கள் உன்னைப் பெற்றெடுத்தார்கள் அதற்கு ஈடாக உன்னால் எதையும் செய்ய முடியாது என்பதை நினைவில் இருத்து.

(சீ.ஞா. 7:27-28)

- உமக்காக உமது பெற்றோர் செய்யும் தியாகங்கள் எவை என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவும்.
- நீர் உமது பெற்றோருக்காகச் செய்யும் கடமைகள் எவை என்பதைப் பற்றிக் கலந்துரையாடி பட்டியல் ஒன்று தயாரிக்குக.



இலவச விநியோகத்திற்காக

சுய கற்றலுக்கான செயற்பாடு :

- மேலே தயாரிக்கும் பட்டியலில் இன்று நீர் செய்யும் கடமைகளுக்கு முன் (✓) அடையாளத்தையும், செய்யாத அல்லது செய்ய எதிர்பார்க்கின்ற கடமைகளுக்கு முன் (✗) அடையாளத்தையும் இடவும். (✗) அடையாளத்தை இட்ட செயற்பாட்டை (✓) சரிசெய்து கொள்வதற்கு நீர் மேற்கொள்ளும் முயற்சிகள் எவை என்று குறிப்பிடுக.

| எமது பெற்றோருக்காகச் செய்யும் செயற்பாடுகள் / கடமைகள் | இன்று நான் செய்பவை | இன்று நான் செய்ய முயற்சிப்பவை |
|---|---|---|
| **உ+ம் :** கேட்கும் உதவிகளைச் செய்து கொடுத்தல். | ✓ | |

பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள். ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது. "உன் தந்தையையும் தாயையும் மதித்து நட" என்பதே வாக்குறுதியை உள்ளடக்கிய முதலாவது கட்டளை. "இதனால் நீ நலம் பெறுவாய்; மண்ணுலகில் நீடூழி வாழ்வாய் என்பதே அவ்வாக்குறுதி".

(எபே. 6:1-3)



இலவச விநியோகத்திற்காக

## உங்கள் வாழ்க்கைக்கு...

- உங்கள் பெற்றோரின் பிறந்த நாள், திருமண நாளைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- அதனை நினைவில் வைத்திருங்கள்.
- அந்நாளில் அவர்களை மகிழ்ச்சிப்படுத்த அவர்களை வாழ்த்துங்கள்.
- அவர்கள் உங்களுக்காகச் செய்யும் நன்மைகளுக்காக நன்றி கூறுங்கள்.
- அவர்களின் எதிர்கால வாழ்வுக்காக ஆசி கூறுங்கள்.
- தினமும் அவர்களுக்காகச் செபியுங்கள்.



உலகிற்கு ஒளியாகும் கிறிஸ்தவ குடும்பம்



இலவச விநியோகத்திற்காக